2002 ஏப்ரல் 10]

4. விதி 110–ன் கீழ் அறிக்கை

திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்திற்குப் புத்துயிர் அளித்தல் பற்றிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை ஒன்று அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு, பொதுத் துறை, வங்கிகள், நிதி நிறுவனங்கள், தனியார் ஆகியோர் இணைந்து, ஒரு புதிய முயற்சியாக, திருப்பூர் நகரத்திற்கு, அடிப்படைக் கட்டுமான வசதிகளைச் செய்து கொடுக்க, 1995ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு முயற்சியை மேற்கொண்டது. அந்த முயற்சிதான் “புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம்”. அந்தக் கழகத்தை தொடங்கி, அதன் மூலம், திருப்பூர் நகருக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிவு நீர் வடிகால் வசதி, தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீர், சாலை வசதிகள் ஆகியவை செய்து தரப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. திருப்பூர் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஊரகப் பஞ்சாயத்துகள், நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் உள்ளூர்த் திட்டப் பகுதியில் உள்ள ஊர்களில் உள்ள குடியிருப்புகள் மற்றும் தொழில்கள் பயன்படுமாறு இந்தத் திட்டம் அமைக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியைத் தொடர்ந்து வந்த தி.மு.க அரசு இந்த மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கட்டமைப்பு வசதிகளை அமைக்க எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அதாவது, இதற்கான உதவி பெறுவதற்கு நிதி நிறுவனங்கள், பொதுத் துறை, அரசுத் துறை ஆகியவற்றைக் கொண்டு ஒரு நிதியை உருவாக்க எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை.

முற்பகல் 11-20

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, மீண்டும் திருப்பூர் நகர

மேம்பாட்டுக் கழகத்திற்காக 615 கோடி ரூபாய் நிதியினை ஏற்பாடு செய்வதற்காக முன் முயற்சியாகத் தமிழக அரசு 30 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன்வந்துள்ளது. தமிழக அரசு முன்வந்ததைத் தொடர்ந்து, இதர நிதி நிறுவனங்கள் இந்தத் திட்டத்திற்கு நிதி வழங்க முன்வந்துள்ளன. திருப்பூர் நகரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள இத்திட்டம் நாளொன்றிற்கு 185 மில்லியன் லிட்டர் நீரினைத் திருப்பூர் நகருக்கும், வழியோர கிராமங்களுக்கும் 3 ஆண்டுகளுக்குள் வழங்கும்.

திருப்பூர் நகரில் வசிக்கும் 3.5 இலட்சம் மக்கள் மட்டுமின்றி அந்த நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் 4 இலட்சம் மக்களும் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள். இத்திட்டம், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் கடுமையான அறைகூவலை எதிர்கொள்ள வேண்டியுள்ள பின்னலாடைத் தொழிலின் போட்டித் திறனை மேம்படுத்தும். நிலத்தடி நீர் மாசுபடுவது அதிகரித்து வருவதால், தொலைதூரத்தில் உள்ள விவசாயக் கிணறுகளிலிருந்து நீர் கொண்டு வர வேண்டியுள்ள நிலை இத்தொழிலின் சாத்தியப்பாட்டினை அச்சுறுத்துகிறது. அதைவிட முக்கியமாக திருப்பூர் குடிநீர்த் திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதால் அது உலக வர்த்தக நிறுவனத்தின் கடுமையான கட்டுப்பாடுகளை எதிர்கொள்ள திருப்பூர் ஏற்றுமதியாளர்களுக்கு உதவியாக இருக்கும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஆனால் தனியாக ஒரு புதிய கழிவுநீர் அகற்றும் திட்டம் திருப்பூர் நகரில் 60 சதவிகிதம் பகுதிகள் பயன்பெறும்விதத்தில் செயல்படும். இதன்மூலம் சென்னைக்கு அடுத்தபடியாக மாநிலத்திலே அதிக அளவு இணைப்புகளைக் கொண்ட கழிவுநீர் அகற்றும் திட்டத்தினைத் திருப்பூர் பெறுகிறது.

முன்சொல்லப்பட்டவைகளால், இத்திட்டத்தின் மூலம் இப்பகுதிகளில் சுற்றுப்புறச் சூழல் பயனுள்ள விளைவை ஏற்படுத்தும். தொழிற்சாலைக் கழிவுகளும், குடியிருப்புக் கழிவுகளும் சுத்திகரிப்புச் செய்யப்படுவது உறுதி செய்யப்படுவதால், இத்திட்டத்தின் விளைவாக இப்பகுதியின் நிலத்தடிநீர் மேம்பாடு அடையும். நாட்டிலேயே முதன்முதலாக வணிக முறையில் சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தலும், புதுப்பித்தலும் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

2000 ஆம் ஆண்டு பிப்ரவரி 11 ஆம் தேதி தமிழ்நாடு அரசும், திருப்பூர் நகராட்சியும், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகத்துடன் சலுகை ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. அதைத்தொடர்ந்து புதிய திருப்பூர் பகுதி

2002 ஏப்ரல் 10] [திரு. சி. துரைராஜ்]

மேம்பாட்டுக் கழகம் இதற்குச் செயல் திட்டம் வகுத்து, கட்டுமானங்களை ஏற்படுத்தி இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களின் கூட்டமைப்புடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இக்கூட்டமைப்பு, மகேந்திரா, பெக்டெல், மற்றும் யுனைடெட் யுட்டிலிட்டீஸ் ஆகிய நிறுவனங்களைக் கொண்டதாகும். இத்திட்டம் சுமார் ஓர் ஆண்டு காலம் தாமதப்பட்டிருப்பினும், 2001 ஆம் ஆண்டிலே, மே மாதம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பதவியேற்றபின் இத்திட்டம் முதன்மையாகக் கருதப்பட்டு, அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இது தமிழ் மாநிலத்திற்கு மட்டுமின்றி, தமிழ்நாடு முழுமைக்குமே ஒரு முன்னோடித் திட்டமாகும். வளர்ச்சிப் பணிகளில் பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பு என்னும் முன்மாதிரிக்கு இத்திட்டம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவின் 34 முதல் 40 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2002

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS